# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF ADDITIONAL DISTRICT MUNSIF, TENKASI.

O.S. No. 118/2021

Deposition of witness for PW1

| | | |
|---|---|---|
| Name | : | மோகன் சற்குணம் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 09.03.2023.

முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் 2ம் வாதி. 1ம் வாதிக்கும் சேர்த்து சாட்சியம் அளிக்கிறேன். என்னுடைய முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இந்த நிரூபண வாக்குமூலம் என்னுடைய தகவலின் அடிப்படையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. நிரூபண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து உண்மை என உறுதி கூறி கையொப்பம் செய்துள்ளேன். 28.01.1983 தேதியிட்ட 113/1983 எண் கொண்ட கிரைய ஆவணம் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.1, 28.02.1983 தேதியிட்ட 249/1983 எண் கொண்ட கிரைய ஆவணம் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.2, அ.வ.எண்.375/1984 ல் 16.10.1984 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3, 28.06.2018 தேதியிட்ட 1767/2018 எண் கொண்டஏற்பாடு ஆவணம் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.4, வலைதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட பட்டா **(எண்ணம் 5)** வா.சா.ஆ.5, அடங்கல் உண்மை நகல் வா.சா.ஆ.6, **(வா.சா.ஆ.6 கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்டுள்ளது என்பதால் குறியீடு செய்ய முடியாது என பிரதிவாதிகளின் கற்றறிந்த வழக்கறிஞர் ஆட்சேபணை தெரிவித்ததால் இந்த ஆவணம் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது. ஆட்சேபணை தீர்ப்பு பகரும் போது முடிவு செய்யப்படும்)** தீர்வை ரசீது வா.சா.ஆ.7, வலைதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட சர்வே எண்கள்.218, 204, 219 க்கான புல வரைபடம் வா.சா.ஆ.8, வலைதளத்தில்

இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட செல்வராஜ் இறப்பு சான்று வா.சா.ஆ.9, புகார் மனு ஏற்பு ரசீது வா.சா.ஆ.10.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/- கே.பாஸ்கர்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, (FAC)
தென்காசி.